Ontario Energy Board
Commission de l’énergie de l’Ontario

TAKE CHARGE

# குறைந்த-வருமானம் உள்ளவர்களுக்கான ஒன்ராறியோவின் சக்தி உதவித் திட்டம் (LEAP)

### இயற்கை வாயு

## LEAP அவசரகாலப் பண உதவி

தங்களுடைய கட்டணச் சீட்டைச் செலுத்துவதில் பிரச்சினை உள்ள குறைந்த-வருமானமுள்ள சக்தி நுகர்வோர், தங்களுடைய சேவைகள் துண்டிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கான அவசரகால நிவாரணத்துக்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கலாம்.

**யார் தகுதியைப் பெறக்கூடியவர்கள்**

குடும்ப வருமானம், உங்கள் வீட்டில் உள்ள நபர்களின் எண்ணிக்கை, நீங்கள் வாழும் நகரின் அல்லது மாநகரின் அளவு போன்ற காரணிகளின் அடிப்படையில் நீங்கள் தகுதியானவரா என்பதை உங்களுடைய பயன்பாட்டு நிறுவனத்துடன் பங்காளராக உள்ள ஒரு சமூக சேவை நிறுவனம் மதிப்பீடு செய்யும்.

**என்ன உதவி கிடைக்கக்கூடியதாக உள்ளது**

தகுதியுடையவராக நீங்கள் இருந்தால், அவசரகால உதவியாக $500 வரை உங்களுக்குக் கிடைக்கலாம். அது நேரடியாக உங்களுடைய பயன்பாட்டு நிறுவனத்துக்குச் செலுத்தப்படும்.

- உங்களுடைய கட்டணச் சீட்டைச் செலுத்த நாள் தவறியிருந்தால் மட்டுமே உதவி கிடைக்கும்.
- அவசரகாலத்துக்கு மட்டுமே உதவி உண்டு. உங்களுடைய கட்டணச் சீட்டுக்களைச் செலுத்தத் தொடர்ந்து உதவி கிடைக்கும் என்பதல்ல இதன் கருத்து.

•	நீங்கள் செலுத்த வேண்டிய உங்களுடைய கட்டணத்தை விட அதிகமான பணத்தை நீங்கள் பெற முடியாது.

## உதவிக்காக யாரைத் தொடர்பு கொள்வது

1. ஒரு சமூக சேவை அல்லது அரச நிறுவனத்துக்கு ஊடாக நீங்கள் செல்ல வேண்டும். உங்களுடைய உள்ளூர் இயற்கை வாயுப் பயன்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். அவர்கள் உங்களுடைய பகுதியில் சேவையாற்றும் ஒரு நிறுவனத்துடன் உங்களை இணைத்துவிடுவார்கள், அல்லது நிறுவனங்களின் பட்டியல் ஒன்றை எங்களுடைய இணையத்தளத்தில் பார்வையிடுங்கள்.

2. ஒரு நேர்காணலுக்காக அந்த நிறுவனத்தை நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கலாம். பின்வருவன உள்ளடங்கலாக சில பத்திரங்களைச் சமர்ப்பிக்கும்படி நீங்கள் கேட்கப்படலாம்:

- அடையாள ஆவணம், இயற்கை வாயுக் கட்டணச் சீட்டுக்கள், துண்டிப்பு அறிவித்தல்கள், வாடகை ஒப்பந்தம், குத்தகை அல்லது அடமானப் பத்திரங்களின் ஒரு பிரதி, வீட்டு வருமானத்துக்கான சான்று, (காசோலையின் அடித்துண்டு, வேலைவாய்ப்புக் கடிதம், போன்றவை.), வங்கி அறிக்கைகள், போன்றவை.

## குறைந்த-வருமானமுள்ள வாடிக்கையாளர்களுக்கான விசேட விதிமுறைகள்

எல்லைப்படுத்தப்பட்ட நிதி வளங்கள் உள்ள வாடிக்கையாளர்களைக் கையாளும் போது, இயற்கை வாயுப் பயன்பாட்டு நிறுவனங்கள் பின்பற்றுவதற்கான விசேட விதிமுறைகளையும் OEB உருவாக்கியுள்ளது.

### இந்த விதிமுறைகள் சொல்பவை:

*	பாதுகாப்பு வைப்புத்தொகை விலக்களிப்பும் மீளக்கையளிப்பும்.

*      தவறுதலாக உங்களிடமிருந்து குறைவான கட்டணத்தை உங்களுடைய பயன்பாட்டு நிறுவனம் அறவிட்டிருந்தால் அதைத் திரும்பச் செலுத்த மேலதிக நேர அவகாசம்.

*      சமமான கொடுப்பனவுக் கட்டணம் அல்லது கட்டணம் செலுத்தும் திட்டத் தெரிவுகள்.

*      துண்டித்தலை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தால் ஒரு நியாயமான செயலாக்கம்.

*      நெகிழ்தன்மையுடைய நிலுவைக் கட்டணம் செலுத்தும் உடன்படிக்கைகள்.

விபரங்களுக்கு உங்களுடைய பயன்பாட்டு நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

<u>பின்வருவன நிகழ்ந்தால், இந்த விசேட விதிமுறைகளுக்கு நீங்கள் தகுதியுள்ளவராவீர்கள்</u>:

A. வேண்டிய தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்கிறீர்கள் என உங்களுடைய உள்ளூர் சமூக நிறுவனம் தீர்மானிக்கிறது.
B. கடந்த இரண்டு வருட காலத்துக்குள் அவசரகால நிதி உதவியை நீங்கள் பெற்றுள்ளீர்கள்.

## <u>வருடம்பூராவும் கிடைக்கும்</u>

அவசரகால நிதி உதவி வருடம் பூராவும் கிடைக்கும் . அவசரகால நிதி உதவியை வழங்கும் உங்களுடைய பயன்பாட்டு நிறுவனத்துடன்_அல்லது ஏதாவது ஒரு சமூக சேவை அல்லது அரச நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

குறிப்பு: LEAP க்குப் பதிலாக, <u>பனிக்கால உஷ்ணம்</u> (WINTER WARMTH) எனப்படும் ஒரு திட்டத்தை Union Gas தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. மேலதிக தகவல்களுக்குப் பார்வையிடுங்கள் :[www.uniongas.com](http://www.uniongas.com).

## தகவலறிந்த சக்தி நுகர்வோராக இருப்பதற்கு, ஒன்ராறியோ சக்தி சபை உங்களுக்கு உதவலாம்

பல்வேறு விடயங்கள் பற்றிய தகவல்களுக்குப் பார்வையிடுங்கள்:
www.ontarioenergyboard.ca/OEB/Consumers

எங்களுடைய நுகர்வோர் தொடர்புகள் மையத்தைத் தொடர்புகொள்ளுங்கள் (திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8:30 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.)

1-877-632-2727 (ஒன்ராறியோவுக்குள் கட்டணமற்றது)
416-314-2455 (ரொறன்ரோ பெரும்பாகத்துக்குள் அல்லது கனடாவுக்கு வெளியே)
consumerrelations@ontarioenergyboard.ca

எங்களைப் பின்தொடருங்கள்: @OntEnergyBoard

ஒன்ராறியோ சக்திச் சபை என்பது சுயாதீனமான, பாரபட்சமற்ற ஒரு பொது நிறுவனம் ஆகும். பொதுமக்களின் நலனுக்காக நாங்கள் முடிவெடுக்கின்றோம். ஒரு நியாயமான செலவில், நம்பகமான சக்திச் சேவைகளை உங்களுக்கு வழங்கும், பணரீதியாக சாத்தியமான வினைத்திறனான சக்தித் துறையை ஊக்குவிப்பது எங்களுடைய நோக்கம் ஆகும்.

*வேறு மொழிகளிலும் இத் தகவல் கிடைக்கின்றது. எங்களுடைய இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது எங்களுடைய நுகர்வோர் தொடர்புகள் மையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.*